பக்கங்கள் : எட்டு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 14 வெள்ளிக்கிழமை (29.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 34

# போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வழிமுறைகளை மாற்றி அமைக்கும்

## தற்போதைய யுத்தச் சூழ்நிலைக்கு ஏற்ற புதிய உத்திகள் வகுக்கப்படும்

கொழும்பு, டிசெம்பர் 29

போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கு முரணாக அரசாங்கப் படைகளும் விடுதலைப் புலிகளும் மோதல்களில் ஈடுபட்டுள்ளதால் உருவாகியுள்ள சூழ்நிலையில் - தமது செயற்படு வழிமுறைகளை மாற்றி அமைப்பதற்கு, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு முடிவு செய்துள்ளது.

தங்கள் கண்காணிப்பு நடைமுறைகளை எவ்வாறு மாற்றிக்கொள்வது என்பதனை ஆராயும் கருத்தரங்கு ஒன்றை குழு விரைவில் நடத்த உள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் உறுப்பினர்கள் இருவர் புதனிரவு புத்தளத்தில் கடத்தல்

புத்தளம், டிசெ.29

புத்தளம் - சேனைக்குடியிருப்பில் அமைந்துள்ள அகதிமுகாம் ஒன்றிலிருந்து நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் புளொட் உறுப்பினர்கள் எனக் கூறப்படும் இரண்டு இளைஞர்கள் வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

'மாமா' என்றழைக்கப்படும் பாக்கிய ராஜா மற்றும் ஹரிகாலன் ஆகியோரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இவர்களைக் கடத்

(08ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் முகர்ஜியின் விஜயத்தின் முன் வெளியாகும்?

கொழும்பு,டிசெ.29

அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான யோசனைகள், இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கு முன்னதாக வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாக அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரணாப் முகர்ஜி எதிர்வரும் 8ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கின்றார்.

கடந்த மாதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது, பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்திருந்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வருகை தரும்போது தீர்வு யோசனைகள் வெளியாகியிருக்கும் என அப்போது ஜனாதிபதி இந்தியப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச காப்புறுதி நிறுவனத்துடன் 'பர்ஹா' கப்பல் கம்பனி தொடர்பு

முல்லைத்தீவில் புலிகளின் கட்டுப்பாட்டுக் கடற் பிரதேசத்தில் தரை தட்டியுள்ள 'பர்ஹா-III' கப்பல் கம்பனியினர், கப்பலை மீட்பது தொடர்பாக சர்வதேசக் காப்புறுதிக் கம்பனியுடன் பேச்சு நடத்திக் கொண்டிருக்கின்றன என கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் தஸநாயக்க நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அதேவேளை -

கப்பலை மீட்டுத்தருமாறு கப்பல் நிறுவனம் அனுசரணையாளர்களான நோர்வேயைக் கேட்டிருந்தது. அதனை உறுதிப்படுத்திய நோர்வே, விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புகளை ஏற்படுத்தி இது விடயமாகக் கலந்துரையாடி உள்ளது.

கப்பலை மீட்கும் விடயத்துக்கு தாங்கள் உதவ முடியாது என்றும் -

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கப்பல் நிறுவனத்தையே தொடர்புகளை ஏற்படுத்துமாறும் - நோர்வே தெரியப்படுத்தி இருப்பதாக இணையத்தளச் செய்தி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை-கப்பல்நிறுவனம்இலங்கை

(08ஆம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சிக் குழுவின் கூட்டு முயற்சியை குலைப்பது சமாதானத்துக்கு ஆபத்து!

### எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்கிறார் ரணில்

கொழும்பு, டிசெ. 29

"புரையோடிப் போயுள்ள தேசிய இனப் பிரச்சினைக்குப் பொதுவான இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக முயன்றுவரும் சர்வகட்சிக் குழுவின் செயற்பாட்டுக்கு எதிர்ப்புக்காட்டுவது, நாட்டில் சமாதானம் உருவாவதை ஆபத்துக்குள்ளாக்கும்."

- இவ்வாறு நேற்று எச்சரிக்கை விடுத்தார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்பதற்காகவே பிரதான கட்சிகளான ஐ.தே.கட்சியும், ஸ்ரீல.சு.கட்சியும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டன. ஒப்பந்தம் குறித்து விமர்சிப்பதை விடுத்து அனைத்துத் தரப்பினரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரது அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர்களது பிள்ளைகளுக்குப் புலமைப் பரிசில் வழங்கும் வைப

(08ஆம் பக்கம் பார்க்க)

## கஜுவத்தையில் ஷெல் வீச்சு இரு படையினர் படுகாயம்!

மட்டக்களப்பு,டிசெ.29

மட்டக்களப்பு மாவட்டம் கஜுவத்தை இராணுவ முகாம் மீது நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் இரு இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணி தொடக்கம் 11 மணிவரை மாங்கேணி, கஜுவத்தை, வாழைச்சேனை கடதாசித் தொழிற்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு இணைப்புக்கே ஆதரவு ஐ.தே.கட்சியின் நிலைப்பாடு மாறாது!

கொழும்பு, டிசெ. 29

நீதிமன்றத் தீர்ப்புக்கமைய வடக்கு - கிழக்கை நிரந்தரமாகப் பிரித்துவிட அரசு தற்போது எடுத்துவரும் தீவிர முயற்சியானது இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு எதிரான நடவடிக்கையாகும். இந்த இரு மாகாணங்களும் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ தொடர்ந்தும் இணைந்திருக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் சட்டமூலத்தைக் கொண்டுவந்தால் அதற்கு ஆதரவு வழங்குவது பற்றிப் பரிசீலிப்போம் என்ற ஐ.தே.க.வின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமுமில்லை.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று 'உதயனு'க்குத்தெரிவித்தார். இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்,

"வடக்கு - கிழக்கு இணைப்பு சட்ட விரோதமானது என்று நீதிமன்றம் தீர்ப்பு

(08ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் கிளைமோர்; 2 படையினர் பலி, மூவர் காயம்

தென்மராட்சி,டிசெ.29

சாவகச்சேரி நகரப் பகுதிக்கு சமீபமாக டச்சு வீதியில் ஹென்ஸ்மன் ஒழுங்கையில் நேற்று பிற்பகல் 1.10 மணியளவில் இராணுவ 'வாகனத்தை இலக்கு வைத்து கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டனர். மூன்று படையினர் காயமடைந்தனர்.

காயமடைந்த படையினர் பலாலி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். ( )

## 'சண்டே லீடர்' ஆசிரியரை கைதுசெய்ய சி.ஐ.டி. திட்டம்? தகவல் அறிந்து ஊடகவியலாளர்கள் ஒன்றுகூடி எதிர்ப்பு!

கொழும்பு, டிசெ.29

'சண்டே லீடர்' ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவைக் கைதுசெய்வதற்கு அரச உயர் மட்டத்திலிருந்து உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது என்று நேற்று கொழும்பில் தகவல் வெளியாகியது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுபாப்புக்காக பலகோடி ரூபா செலவில் இரகசிய இடம் ஒன்றில் ஆடம்பர பதுங்குகுழி அமைக்கப்பட்டு வருகிறது என்று 'சண்டே லீடர்' பத்திரிகையில் செய்தி வெளியிட்டமை தொடர்பாகவே அதன் ஆசிரியரான லஸந்த விக்கிரமதுங்கவைக் கைதுசெய்ய சி.ஐ.டியினருக்கு மேலிட உத்தரவு வழங்கப்பட்டிருப்பதாக நேற்று தகவல் பரவியது.

இந்தத் தகவலை எப்படியோ அறிந்துகொண்ட ஊடகவியலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், அவற்றின் உறுப்பினர்கள் என பெருமளவானோர் நேற்று 'சண்டே லீடர்' பத்திரிகை அலுவலகம் முன்பாக ஒன்று திரண்டனர்.

லஸந்தவை கைதுசெய்ய விடமாட்டோம் என்று கூறி அங்கு திரண்ட பெருமளவான ஊடகவியலாளர்கள், ஊடகத்துறையின் சுதந்திரம் மீதான தடையை எதிர்த்து

(08ஆம் பக்கம் பார்க்க)

### வரலாற்றில் முதல் தடவையாக

## பாதுகாப்புச் சபைக் கூட்டத்தை திருமலையில் கூட்டினார் மஹிந்த

கொழும்பு, டிசெ. 29

இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக தேசிய பாதுகாப்புச் சபையின் கூட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திருகோணமலையில் கூட்டியிருக்கிறார்.

நேற்றுமுன்தினம் திருகோணமலைக் கடற்படைத் தளத்துக்கு திடீர் விஜயம் மேற்கொண்டபோது பாதுகாப்புச் சபைக் கூட்டத்தை ஜனாதிபதி அங்கு கூட்டினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரண்டரை மணி நேரம் நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு நாட்டின் முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமை வகித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீர

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## முதலாவது பிறந்த தின வாழ்த்து



அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த
**கலியுகதாஸ் - நகுலேஸ்வரி**
தம்பதியரின்
செல்வப்புதல்வி

### செல்வி யனுஷா

தனது முதலாவது பிறந்த நாளை
இன்று (29.12.2006) வெள்ளிக்கிழமை
தனது இல்லத்தில்
வெகு விமர்சையாக கொண்டாடுகின்றார்.
யனுஷாவை அம்மா, அப்பா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, அப்பப்பா, பெரியப்பா குடும்பத்தினர், பெரியம்மா குடும்பத்தினர், இந்தியாவில் உள்ள பெரியம்மா குடும்பத்தினர், மாமா குடும்பத்தினர், பிரான்ஸில் உள்ள மாமா குடும்பத்தினர், அத்தை குடும்பத்தினர், அண்ணாமார், அக்கா மார், மச்சான்மார், மச்சாள்மார், வெளிநாட்டில் உள்ள உறவினர் கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் நல்லருள்பெற்று, பல்கலை யும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்க! வாழ்க!! என வாழ்த்துகின்றனர்.

*விக்கினேஸ்வரா வீதி,*
*அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.* (சி.51705)

வாழ்த்துபவர்கள்:
மோகன் குடும்பத்தினர்.

## 59ஆம் நாள் நினைவஞ்சலி 37ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
18.04.1928 | 06.02.1922

உதிர்வு
30.10.2006 | 23.11.2006



அமரர்
**செல்லையா தியாகராசா**
(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

திதி: 29.12.2006

அமரர்
**செல்லத்துரை நல்லம்மா**

நீவிர் எமை விட்டுச் சென்றாலும்
எம்மேல் கொண்ட அன்பையும், பாசத்தையும்
நாம் என்றென்றும் மறவோம்.

*ஈஞ்சடி,*
*சுதுமலை வடக்கு, மானிப்பாய்.* (65202)

**என்றும் நினைவுடன்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மாணிக்கதியாகராஜா கனகம்மா



நல்லூரை பிறப்பிடமாகவும் மல்லாவியில் வசித்து, பின் நல்லூரில் வசித்து வந்தவருமாகிய திருமதி மாணிக்க தியாகராஜா கனகம்மா 27.12.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் மாணிக்கதியாகராஜாவின் அன்பு மனைவியும் புவனேஸ்வரி, விமலாதேவி (இந்தியா), சிவறாஜா (பிரான்ஸ்), சுமித்திரா (லண்டன்), இராமச் சந்திரன் (பிரான்ஸ்), மனோகரன் (பிரான்ஸ்), வசந்தா, வனிதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் செல் லத்துரை, கைலாசநாதன், பேபி (தேவி- பிரான்ஸ்), செல்வராஜா (பிரான்ஸ்), அழகரட்ணம் (பிரான்ஸ்), தாமரைச்செல்வி (பிரான்ஸ்), மகேஸ்வரன் (லண்டன்), மகேந்திரன் (பிரான்ஸ்), கமலம், பர மானந்தம் ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.12.2006) வியாழக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

**கச்சேரி, நல்லூர் வீதி,**
**நல்லூர்.** (65196)

தகவல்:
**புவனேஸ்வரி, வசந்தா.**
**(மகள்மார்).**

### மனவல்பிள்ளை அந்தோனிப்பிள்ளை



மனவல்பிள்ளை அந்தோனிப்பிள்ளை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மனவல்பிள்ளை - சூசானா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற யோசேப்பினா, சிறில், மரிசலின், யோகம்மா (பிரான்ஸ்) ஆகியோரின் அன் புச் சகோதரனும் மெற்றில்டா, சௌந்தரநாயகம் (ஜேர் மனி), பிறீடா, ஸ்ரெலா ஆகியோரின் அன்புத் தந்தை யும் யோசேப், கௌரி, நியூட்டன் ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற நிஷானி, கிறவுதர், டிலக்சி, நியூமன், டொறின், சுபஸ்ரிகா, ஜெயந்தன், நிரோஜி ஆகி யோரின் அன்புப் பேர னும், காலஞ்சென்ற றோஸ் பவியன், வேக்மன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (29.12.2006) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தாவடி சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

***இல.27, புதுமை மாதா கோயிலடி,***
***யாழ்ப்பாணம்.*** (65227)

தகவல்:
**எமெல்டா (மனைவி).**

### சதாசிவம் சசிக்குமார் (சசி)



அரியாலையைச் சேர்ந்த சதாசிவம் சசிக்குமார் (சசி) 27.12.2006 புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் - செல்வராணி தம்பதியரின் அன்பு மகனும் ஜீவலோஜினியின் (ஜீவா-நவாலி) அன்புக் கணவரும் சறோயதேவி, சண் முகராஜா (ஜேர்மனி), விஜயா, காலஞ்சென்ற சாந்தினி மற்றும் கமலநாதன், தர்மராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் உமாசந்திரன், பாஸ்கரன், பிறேமாவதி, சசிகலா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 29.12.2006 நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப.2 மணிக்கு சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

***45/1, ஸ்ரான்லி கல்லூரி வீதி,***
***அரியாலை மத்தி, யாழ்ப்பாணம்.*** (65238)

தகவல்:
குடும்பத்தினர்.



பொன்னாலை
**திருவருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்**

## வைகுண்ட ஏகாதசி

**திவ்விய மஹோற்சவ விஞ்ஞாபனம்**

மார்கழி மீ 15ஆம் நாள் (30.12.2006)
சனிக்கிழமை வைகுண்ட ஏகாதசி தினம்
அதிகாலை 3 மணிக்கு சங்காபிஷேகம்.
காலை 6 மணிக்கு சொர்க்கவாசல் தரிசனம்
முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டப் பூஜை
முற்பகல் 11 மணிக்கு இரதோற்சவம்
இரவு வைகுண்ட ஏகாதசி புராண படனமும் பஜனையும் நிகழும்

மார்கழி மீ 16ஆம் நாள் (31.12.2006)
ஞாயிற்றுக்கிழமை தீர்த்தம்

* வருடாந்த மார்கழி மாதப் பஜனை ஊர் வலம் 14.01.2007 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.

## தவறிவிட்டது

தர்மாவதி ஆறுமுகம் என்பவருடைய தே.அ.அ. (இல 685781220V), ஏனைய ஆவணங்களும் யாழ். ஆஸ் பத்திரி வீதியில், தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 161, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். அல்லது சொந்த முகவரியில் ஒப்படைத்துதவவும்.

## தவறிவிட்டது

இராஜேந்திரம் ரமேஸ் என்பவருடைய தே.அ.அட்டை (770732565V), கொம்மாந்துறை, வல்வெட்டித்துறை 28.12.2006 துரையப்பா ஸ்ரேடியம் முன்பாக தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியிலோ அல்லது 31, சந்தனமாதா கோயில் வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலே ஒப் படைத்துதவவும்.

தொ.பே. இல: 0779170421.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். தொழில்நுட்பக்கல்லூரி ஆரம்பித்தி லிருந்தே அதன் பல்வேறு பரிணாம வளர்ச் சிப் பாதையில் தன்னை அர்ப்பணித்து சேவை ஆற்றி இன்று வரை கல்லூரியில் அன்புடன் நினைவு கூரும் எமது அன்புப்

### பேராசிரியர் வல்லிபுரம் கந்தையா

அவர்களின் ஆத்மசாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ந. யோகராஜன்,
அதிபர்/ பிரதிப் பிராந்திய பணிப்பாளர்,
உப அதிபர், பதிவாளர் பகுதித் தலைவர்கள், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பல்தொழில்நுட்ப நிறுவன கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் உதவிச் சங்க தலைவர், பொருளாளர் ஊழியர் சங்கம், தலைவர் செயலாளர், பொருளாளர்.

## கண்ணீர் அஞ்சலி



தோழர்
**நடராசா ஜெகதீசன்**
(நல்லூர் ப.நோ.கூ.சங்க பணியாளர்)

சகபணியாளர் தோழர் ந.ஜெகதீசன் அவர்கள் 27.12.2006 கால மான செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைந்தோம். அன்னா ரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அவரது மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(65190)

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்
கிளை: நல்லூர் ப.நோ.கூ.சங்கம்.

## மரண அறிவித்தல்

### திருமதி குலசிங்கம் பூமணி



கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பி டமாகவும் கொண்ட குல சிங்கம் பூமணி (28.12.2006) வியாழக்கிழமை இறைப தம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு குலசிங்கத்தின் அன்பு மனைவியும், தெய் வேந்திரன் (அமரர்), மகேந் திரன், சறோஜினிதேவி, யோகராசா (சுவிஸ்), சாரதா தேவி (அமரர்), ரவிச்சந்திரன் (அமரர்), குலமணி, சுமதி ஆகியோரின் பாசமிகு தாயும் சறோஜினி, ஸ்ரீ பாலராஜா, சிவசக்தி, பேரானந்தன், சசிகுமார் ஆகியோரின் மாமியும் நிஜேந்தன், குருதர்சன், விஜிந்தன், சுஹாஷன், தயாபரன், பானுஷா, டினோஷா, அனுசா (சுவிஸ்), துசாரகா (சுவிஸ்), குணசாயினி, பூர்வஜா, நிதுசிகா, ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியை கள் இன்று (29.12.2006) வெள்ளிக்கிழமை முற் பகல் 11 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் கொழும்புத்துறை துண்டி மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***21, 3ஆம் குறுக்குத்தெரு,***
***கொழும்புத்துறை.***

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### நாகர் பத்மநாதன் (ஆசாரி)

நாவலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகர் பத்ம நாதன் நேற்று (28.12.2006) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்ப டும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

***புலவர் வீதி,***
***நவாலி வடக்கு, மானிப்பாய்.*** (65232)

தகவல்:
பிள்ளைகள்.

### திருமதி கிருஸ்ணபிள்ளை கண்மணிப்பிள்ளை (தில்லையம்மா)



புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் பழம் றோட் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணபிள்ளை கண்மணிப்பிள்ளை நேற்று (28.12.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - முத்துப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறு முகம் - சின்னாச்சி ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளையின் அன்பு மனைவி யும் காலஞ்சென்றவர்களான சண்முகம், நடராசா, வேலுப்பிள்ளை, முருகேசு, கந்தையா மற்றும் பொன்னம்மா (கனடா) ஆகியோரின் சகோதரியும் காலஞ் சென்றவர்களான விசுவலிங்கம், செல்லையா, சின்னம்மா, செல்லம், கதிரா சிப்பிள்ளை, அன்னம்மா ஆகியோரின் மைத்துனியும், தவமணிதேவி, பத்ம நாதன், நவமணி (ஜேர்மனி), பரமேஸ்வரி (கனடா) மற்றும் காலஞ்சென்ற கமல நாதன் ஆகியோரின் தாயும் தனஞ்செயன் (கனடா), நாகராசா (கனடா), சிவபா லன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் சந்திரிக்கா, ராதிகா, ரவிசங்கர், சிவ சங்கர், ரேணுகா, மேனகா, கிருபா, வதீஸ், ஆனந்தன், சரிதா, தீபா, கார்த்திகா, ஜீவா ஆகியோரின் பேர்த்தியும் விஜி, உதயம், உமா, சுந்தர், ஊஷா ஆகியோ ரின் பெரியதாயும் ராசு, பூமணி, வீரசிங்கம், காலஞ்சென்ற பரமானந்தனின் சிறிய தாயுமாவார். அன்னாரின் பூதவுடல் நேற்று (28.12.2006) வியாழக்கிழமை கொக்குவில் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

***92, பழம் வீதி, கந்தர்மடம்,***
***யாழ்ப்பாணம்.*** (65237)

தகவல்:
**தவமணி தேவி (மணி),**
**பத்மநாதன் (பிள்ளைகள்).**

### 'கலாபூஷணம்' வல்லிபுரம் கந்தையா



(மணியம் மாஸ்டர்- ஓய்வுபெற்ற ஆசிரியர் யா/ கனகரட்ணம் ம.ம.வி., போதனாசிரியர் யாழ். கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி)

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமா கவும் கொண்ட 'கலாபூஷணம்' வல்லிபுரம் கந்தையா (மணியம்மாஸ்டர்) 27.12.2006 புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத் தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யோகம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, கலாபூசணம் பரமசாமி, அன்னலட்சுமி, தர்மலிங்கம் மற்றும் நடராசா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தவராசா, பவானி, சறோஜா, சிவராசா (நோர்வே), யோகராணி (கனடா), சாந்தினி (ஜேர்மனி), திருலோயனி (கனடா), ஆனந்தராஜா (நோர்வே), அருளேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவமணி, கந்தசாமி, லோகநாதன், புஸ்ப ராணி, யோகரட்ணம், குணபாலசிங்கம், சூரியகுமார், சுபதா, சண்முகலிங் கம் ஆகியோரின் அன்பு மாமனும் தம்பித்துரை, கனகசபை, சற்குணவதி ஆகி யோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 40/1, கலைமகள் வீதி, அரியாலையில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (29.12.2006) வெள்ளிக்கிழமை முற்ப கல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித் துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

***40/1, கலைமகள் வீதி,***
***அரியாலை, யாழ்ப்பாணம்.***
***தொ.பே.: 021 222 7881.*** (65220)

தகவல்:
**க.தவராஜா (மகன் - அரியாலை),**
**க. சிவராஜா (மகன் - நோர்வே),**
**க. ஆனந்தராஜா (மகன் - நோர்வே).**

### செல்வி மேசி செல்வராணி



(செல்லா - பெஞ்சமின் செல்வரட்ணம்)

ஏழாலை வடக்கைச் சேர்ந்த செல்வி மேசி செல் வராணி 27.12.2006 புதன்கிழமை கர்த்தருக்குள் நித் திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பெஞ்சமின் செல்வரட் ணம் - திருமதி றோஸ் செபரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதியரின் அன்பு மகளும் கேராபீன் (குவைத்), தேவஜெயந்தி (ஆஸ்திரேலியா), செல்வச் சந்திரன் (பண்டாரவளை), பத்மினி (ஆஸ்திரேலியா), ஜெபச்செல்வன் (கனடா), ஜோதினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு சகோதரியும் செனிற்றா, குகானந்தன், பத்மினி சாந்திக் குமார், கிறிஸ்ரீன், பிறேம்நாத் ஆகியோரின் அன்புமைத்துனியுமாவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (29.12.2006) வெள்ளிக்கி ழமை பிற்பகல் 3 மணிக்கு ஏழாலை வடக்கு 'ஜெப இல்லத்தில்' நடைபெற்று, தென்னிந்திய திருச்சபை ஏழாலை வடக்குச் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**'ஜெபஇல்லம்'**
***ஏழாலை வடக்கு,***
***ஏழாலை.***

தகவல்:
**திருமதி றோ.செ. செல்வரட்ணம் (தாய்),**
**ஆ. தவப்பிரகாசம் (மாமன்).**

(65216)

### திருமதி கந்தையா மகேஸ்வரி



39/4 A, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யைப் பிறப்பிடமாகவும் இல. 24, அச்சக ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா மகேஸ்வரி 27.12.2006 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் கந்தையாவின் (நிர்வாக உதவியாளர்- அரச பெருந்தோட்ட கூட்டுத் தாபனம் - இரத்தினபுரி) அன்பு மனைவியும் மற்றும் விஜயரட்ணம் (ஜேர்மனி), பூலோகரட்ணம் (விகிதர் யாழ். மாநகரசபை), குணரட்ணம் (பிரதம முகாமைத் துவ உதவியாளர் விவசாயத் திணைக்களம் - யாழ்ப்பாணம்), கனகரட்ணம் (கனடா), கமலவதனி (ஆசிரியை கொ/ சென். மேரிஸ் தமிழ் மகா வித்தியா லயம்), இராஜரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயக்குமார் (கொங் கொங் வங்கி, கொழும்பு), திருமதி எஸ். விஜயரட்ணம் (ஜேர்மனி), மதிவ தனி (முகாமைத்துவ உதவியாளர் - யாழ். மாநகர சபை), சியாமினி (ஆசிரியை, யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி), அமுதா (கனடா), லதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் அபிராம், நிஸ்மதா, ரக்ஷிகா, மிலோஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கி ரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

***இல. 24, அச்சக ஒழுங்கை,***
***கொக்குவில் கிழக்கு,***
***கொக்குவில்.***
***தொ.பே.: 021 222 3868.***

தகவல்:
க.பூலோகரட்ணம் . J.P.
(மகன் - முன்னாள் யாழ். மாநகர சபை முதல்வரின் செயலாளர்).

(65228)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலை புனர்நிர்மாணத்துக்கு போர்நிறுத்தமும் பேச்சுகளும் அவசியம்

## இலங்கை நிலைவரம் குறித்து பில் கிளின்டன் கருத்து

கொழும்பு,டிசெ.29

இலங்கையின் முன்னேற்றகரமான சூழலுக்கு அமைதி முயற்சிகள் மிகவும் முக்கியமானவை என்று அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும், ஐ.நா.வின் ஆழிப்பேரலை பேரனர்த்த புனர்நிர்மாணப் பணிக்கான சிறப்புப் பிரதிநிதியுமான பில் கிளின்டன் தெரிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை வெளியான 'வாஷிங்ரன் போஸ்ற்' பத்திரிகையின் கருத்துப் பத்தியில் பில் கிளின்டன் கருத்துத் தெரிவிக்கையில் கூறி யிருப்பதாவது:-

''ஆழிப்பேரலைப் பேரனர்த்தம், இலங்கை மக்களிடையே ஒற்றுமையை உருவாக்குவதில் எதிரான விளைவையே ஏற்படுத்தியுள்ளது.

**நிர்மாணப் பணிகள் முடக்கப்படும்**

மீண்டும் போர் நிறுத்தத்தை நடை முறைப்படுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வராத நிலையில் ஆழிப்பேரலை பேரனர்த்த புனர்நிர்மாணப் பணிகள் முடக்கம் அடைவதைத் தடுக்க முடியாது.

எல்லாத் தரப்பினரும் போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்வருவார்கள் என நான் நம்புகிறேன். அப்படி முன்வரும் வரையில் ஆழிப்பேரலைப் பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்கள் நீங்கப்போவதில்லை.

இந்தோனேஷியாவின் ஆச்சே பிரதேசத்தில் நீண்ட காலப் போரில் ஈடுபட்ட தரப்பினர் தமது வேற்றுமைகளைக் களைந்து விட்டு ஒன்றிணைந்து செயற்பட்டது அந்த நாட்டின் துரித முன்னேற்றத்திற்கு வழி வகுத்திருந்தது.

ஆழிப்பேரலைப் பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மூன்றாவதும், இறுதியுமான பயணத்தை நான் மேற்கொண்ட போது இந்தியா, தாய்லாந்து, இந்தோனேஷியா போன்ற நாடுகளுக்குச் சென்றிருந் தேன். அங்கே எதற்கும் அனுசரித்துப் போகும் உயர்ந்த மனிதப் பண்புகளையும் அதன் மூலம் கட்டியெழுப்பப்படும் சுபீட்சமான எதிர்காலத்தையும் கண்டேன்.'' - இவ்வாறு கிளின்டன் தெரிவித்திருக்கிறார்.



ஆழிப்பேரலைப் பேரனர்த்த புனர்நிர்மாணப் பணிகள் தொடர்பாக ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கைகளில் ஏற்பட்ட அதிருப்தியை வெளிக்காட்டவும், ஆழிப்பேரலைப் பேரனர்த்த புனர்நிர்மாணப் பொதுக் கட்டமைப்பை செயலிழக்கச் செய்ததைக் கண்டிக்கும் முகமாகவும் கிளின்டன் தனது பயணத்தின்போது இலங்கையைத் தவிர்த்திருக்க வேண்டும் - என அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# டிசெ. 31ஆம் திகதியே ஹஜ் பெருநாள்

கொழும்பு,டிசெ.29

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி கொண்டாடப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்ட ஹஜ் பெருநாள், இவ்வருடம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியே கொண்டாடப்பட வேண்டும் என மீளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

துல்ஹஜ் மாதத்திற்கான தலைப்பிறை உரிய தினத்தில் காணப்பட்டதாகத் தாமதமாக அறிவிக்கப்பட்டதனாலேயே உலமா சபையால் இத்தீர்மானம் நேற்றுமுன்தினம் எடுக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை துல்ஹஜ் மாதத்திற்கான தலைப்பிறை தென்படும் தினமாகும். அத்தினத்தில் நாட்டில் எந்தப் பகுதியிலும் தலைப்பிறை தென்பட்டதாகத் தகவல் எதுவும் கொழும்பு பெரிய பள்ளிவாசலுக்கு அறிவிக்கப்படவில்லை.

இதனையடுத்து, அகில இலங்கை உலமா சபை, முஸ்லிம் கலாசார அலுவல்கள் திணைக்களம ஆகியன ஒன்றிணைந்து கொழும்பு பள்ளிவாசலில் கூட்டம் ஒன்றை நடத்தி, பிறை தென்பட்டதாகத் தகவல்கள் கிடைக்காததால் இவ்வருடம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி கொண்டா டப்பட வேண்டிய ஹஜ் பெருநாளை அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி கொண்டாடுவதெனத் தீர்மானித்தன.

# மலையகப் பாடசாலைகளுக்கு ஆசிரிய நியமனம் 11ஆம் திகதி

கொழும்பு,டிசெ.29

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான ஆசிரியர் நியமனங்கள் ஜனவரி 11 ஆம் திகதி வழங்கப்படுமென பிரதிக் கல்வியமைச்சர் எம்.சச்சிதானந்தன் நேற்றுமுன்தினம் உதயனுக்குத் தெரிவித்தார்.

பெருந்தோட்டத்துறை தமிழ்ப் பாடசாலைகளுக்கு 3,179 ஆசிரியர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் கடந்த 9 ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை மாகாண ரீதியில் நடைபெற்றமை தெரிந்ததே. ஆசிரியர் நியமனம் கடந்த 19ஆம் திகதி வழங்கப்படவிருந்தது.

முஸ்லிம் பரீட்சார்த்திகளுக்கான போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகள் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக நியமனம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. இப்போது இப்பெறுபேறுகள் கிடைத்துள்ளன. நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்ற பின்னர் ஜனவரி 11ஆம் திகதி இந்நியமனங்கள் வழங்கப்படுமென்றும் பிரதியமைச்சர் கூறினார். (ஐ)

# பாடசாலையின் தேவையின் பிரகாரம் ஆசிரியர்களை நியமிக்கப் புதிய திட்டம்

## கல்வி அமைச்சு நடைமுறைப்படுத்தவிருக்கிறது

கொழும்பு,டிசெ.29

அடுத்தவருடம் ஆசிரியர் நியமனங்களைப் புதிய திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்த கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்குப் போதிய அளவு ஆசிரியர்களை நியமிப்பதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கத்துடன் இப்புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலைத் தேவையின் அடிப்படையிலான நியமனம் என்று அழைக்கப்படும் இத்திட்டத்தின்படி, பாடசாலையின் விசேட தேவையை அறிந்து அதற்கு ஏற்றபடி ஆசிரியர் நியமனம் வழங்கப்படும்.

குடிசனக் கணக்கெடுப்பு திணைக்களம் மேற்கொள்ளும் வருடாந்த கணக்கெடுப்பின் மீளாய்வு அடிப்படையாக வைத்து ஆசிரியர் தேவை குறித்து வலயக் கல்விப் பணிப்பாளரின் ஆலோசனையைப் பெற்று குறிப்பிட்ட அந்தந்தப் பாடசாலைத் தேவை கவனத்தில் எடுக்கப்பட்டு ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (அ-1)

# சட்டவிரோதமாக மின் இணைப்புப் பெற்ற பெண்ணுக்கு விளக்கமறியல்

கரவெட்டி, டிசெ.29

அல்வாய் கிழக்கில் சட்டவிரோதமாக மின் இணைப்புப்பெற்ற பெண்ணுக்கு ஒரு வார விளக்கமறியல் உத்தரவை பருத்தித்துறை நீதிவான் பிறப்பித்தார்.

அல்வாய் கிழக்கு, அல்வாயைச் சேர்ந்த தர்மலிங்கம் புஸ்பராணி சட்டவிரோதமாக மின் இணைப்புப் பெற்றதாக பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டார். (1-155)

# விழிப்புலனற்றோர் சங்கத்திற்கு உதவ அமைச்சர் இணக்கம்

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்திற்கு நிரந்தர இடமொன்றைப் பெற்றுத் தரவும் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு வேலைவாய்ப்பிற்கென எண்ணெய் வடிக்கும் இயந்திரம் ஒன்றைப் பெற்றுத் தரவும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் இணங்கியுள்ளார் என அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் பிரதிநிதிகள் அண்மையில் அமைச்சரை அவரது யாழ்.அலுவலகத்தில் சந்தித்து தமது தேவைகள் தொடர்பிலான கோரிக்கைகளை முன்வைத்தனர்.

150 அங்கத்தவர்களைக் கொண்டு இயங்கிவரும் சங்கத்திற்கு யாழ்.மாநகர சபை எல்லைக்குள் நிரந்தர இடத்தைப் பெற்றுத் தருதல்,வேலை வாய்ப்புக்கென எண்ணெய் வடிக்கும் இயந்திரத்தைப் பெற்றுத்தருதல், அமைச்சால் உறுதிப்படுத்தப்பட்ட அடையாள அட்டை வழங்குதல், மாதாந்த உதவித் தொகையை அதிகரித்து வழங்குதல், அரச வேலைவாய்ப்பை வழங்கி அதனை நிரந்தரமாக்கித் தருதல், சங்கத்தைப் பதிவுசெய்தல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இக்கோரிக்கைகளை ஏற்ற அமைச்சர் அவற்றை விரைவில் நிறைவேற்றித் தருவதாகவும் இணக்கம் தெரிவித்தார் - என்றுள்ளது.

# சேவை நலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ.29

கடந்த இரு தசாப்தங்களாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெறும் வைத்தியகலாநிதி சின்னத்துரை கதிரவேற்பிள்ளையை கௌரவிக்குமுகமாக சேவை நலன் பாராட்டு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு வைத்தியசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸும், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி க.அரியநாயகமும் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகனும் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட பேராசிரியர் மா.நடராஜசுந்தரமும் கலந்துகொள்வர். (1)

# மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்

ஆனைக்கோட்டை ஜே/ 133 கிராம சேவையாளர் பிரிவில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுனேந்திரா சுதாகர் தலைமையில் ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் அலுவலகத்தில் இடம் பெற்றது. (100)

# மேலும் நான்கு விமானங்களை இலங்கை கொள்வனவு செய்யும்

கொழும்பு, டிசெ.29

உக்ரைனில் இருந்து மேலும் நான்கு மிக் 27 ரக கிபிர் விமானங்களை இலங்கை கொள்வனவு செய்யவிருக்கின்றது.

ஒவ்வொன்றும் 1.5 மில்லியன் அமெரிக்க டொலர் விலையில் கொள்வனவு செய்யப்படுகின்றது.

கடந்த 2000ஆம் ஆண்டில் ஆறு மிக் 27 ரக விமானங்களை உக்ரைனில் இருந்து இலங்கை கொள்வனவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (1)

# வடக்கு-கிழக்கு பிரிப்பு இப்போதைக்கு வேண்டாம்; ஜனாதிபதிக்கு ஆனந்தசங்கரி விளக்கக் கடிதம்

கொழும்பு,டிசெ.29

வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிரிப்பதற்கு இது உகந்த நேரமல்ல. எனவே, இந்த நடவடிக்கை இப்போதைக்கு வேண்டாம்.

- இவ்வாறு வலியுறுத்தி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நீண்ட விளக்கக் கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி. அவரது அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இம்முயற்சி பற்றி வடக்கு - கிழக்கு ஆளுநர் அறிக்கைமூலம் தெரிந்துகொண்டேன். வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பு நியாயமானதா, நியாயமற்றதா என்பது பற்றி நான் விவாதிக்க வரவில்லை. நான் வற்புறுத்திக் கூறுவது அந்த நடவடிக்கைக்கு இது பொருத்தமான நேரம் அல்ல என்பதும் பிரதம அமைச்சர் அவர்கள் நாடாளுமன்றத்தில் வழங்கிய உறுதி மொழிக்கு அமைய சம்பந்தப்பட்ட மக்களிடமே இப்பணியை விட்டு விட வேண்டும் என்பதே.

இந்நிகழ்ச்சி முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசியல் சாசனத்தின் ஆறாவது திருத்தத்துக்கு மேற்கொண்ட நடவடிக்கைக்கு ஒத்ததாகும்.

இது இன்னமும் [illegible] யல்ல - குறிப்பாக யுத்தத்தால் சீரழிந்திருக்கும் பகுதிக்கு சரியோ பிழையோ தமிழ் மக்களும் ஓரளவு இஸ்லாமிய மக்களும் தமது எதிர்காலம் ஒன்றுபட்ட வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பிலேயே தங்கியுள்ளது எனக் கருதுகிறார்கள்.

இக்கட்டத்தில் இணைப்பை பிரிப்பது கிழக்கு மாகாண தமிழ், இஸ்லாமிய மக்கள் விரக்தியடைந்து வேறு வழியின்றி விடுதலைப் புலிகளின் கொடூர செயல்களை மறந்து அவர்களுக்கு பின்செல்ல வழி வகுக்கும்.

இந்த விடயத்தில் மக்களே தீர்மானிப்பதற்கு தாங்கள் அனுமதிக்க வேண்டும். பிரச்சினைகளை சில தமிழ், முஸ்லிம் தலைவர்களோடும் கலந்து ஆலோசிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இப்போது சில கட்சிகள் அக்கோரிக்கையை முன்வைக்க நீதிமன்றமும் சாதகமான தீர்ப்பை வழங்கியது. மாகாணங்களைப் பிரிக்க வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமில்லை.

அதற்குப் பதிலாக விடப்பட்ட தவறுகளை நாடாளுமன்றம் மூலம் நிவர்த்தி செய்ய முடியும். இந்த நாட்டைப் பல தடைவைகள் ஆண்ட தேசியக் கட்சிகளில் ஒன்றான ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு முழு ஆதரவு தருவதாக உறுதியளித்துள்ளது.

மக்களுக்கு இப்பிரிவினையை ஆதரிப்பதற்கோ, எதிர்ப்பதற்கோ ஒரு சந்தர்ப்பம் அளிக்காது ஒரு தலைப்பட்சமாக முடிவெடுப்பது நியாயமற்ற செயலாகும்.

எமது மக்கள் அனைவரும் இன, மத, பேதமின்றி சகல உரிமைகளுடன் வாழ வேண்டுமென விரும்பினால் வடக்கு - கிழக்கு இணைப்பை பிரிப்பதைத் தொடரவிடாது உடன் நிறுத்தி தற்போதுள்ள நிலைமையைத் தொடர விடவேண்டும்.

நாட்டில் அமைதி திரும்பி சகல மக்களும் தத்தமது வீடுகளுக்கு திரும்பும்வரை பிரிவினை சம்பந்தமான பொதுஜன வாக்கெடுப்பு நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும். அதுவரை நாட்டின் நாடாளுமன்ற சபைமூலம் நீதிமன்ற தீர்ப்புக்கு அமைய சில நடவடிக்கைகள் எடுக்கலாம்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசு ஒஸ்லோ, டோக்கியோ ஒப்பந்தங்களின் அடிப்படையில் தீர்வு காண்பதற்கு கட்டுப்பட்டுள்ளது என்பதை வலியுறுத்திக் கூறுவதோடு வேறு ஏதாவது மாற்றுத்திட்டத்தை தமிழ் மக்கள் மீது திணிப்பதை நியாயமற்றதாகக் கருதுகிறேன்.

- என்று தெரிவித்துள்ளார்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் திருவாசக விழா

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நடத்தும் திருவாசக விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் அருளுரையை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் வாழ்த்துரையை டாக்டர் சி.கதிரவேற்பிள்ளையும் நிகழ்த்துவர். ஞானச்சுடர் வெளியீட்டின் 108ஆவது மலரின் வெளியீட்டுரையை எஸ்.தேவதாசனும் மதிப்புரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் நிகழ்த்துவர்.

வல்வை சிவகுரு வித்தியசாலை அதிபர் ஆ.சிவநாதன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.வண்ணை
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
சுவர்க்கவாயில் ஏகாதசி
விஞ்ஞாபனம்
நாளை(30.12.2006) சனிக்கிழமை

மெய்யன்புடையீர்!
நிகழும் விய வருஷம் மார்கழி மாதம் 15ஆம் நாள் (30.12.2006) சனிக்கிழமை அதிகாலை 6 மணிக்கு சுவர்க்கவாயில் தரிசனம் இடம் பெறும். தொடர்ந்து பின்வரும் நிகழ்வுகள் இடம்பெறும். அன்படியார் கள் அனைவரும் வந்து தரிசித்து திருவருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

நிகழ்வுகள்

30.12.2006 சனிக்கிழமை
அதிகாலை 3.30 மணி சுப்பிரபாதம்
அதிகாலை 3.50 மணி திருப்பள்ளியெழுச்சி
அதிகாலை 4 மணி மூலவர் அபிஷேகம்
காலை 5 மணி திருவனந்தல் பூஜை
திருப்பாவை ஓதல்
காலை 5.45 மணி உதய பூஜை
காலை 6.00 மணி சுவர்க்கவாயில் தரிசனம்
காலை 9 மணி மூலவர் அபிஷேகம்
மு.ப. 10.15 மணி காலை சந்தி பூஜை
மு.ப. 10.45 மணி ஆதி வேங்கடேசர் திருவீதியுலா
மாலை 3.45 மணி சாயரட்சை பூஜை
மாலை 4மணி இரட்டாம் கால பூஜை
மாலை 4.30 மணி வசந்த மண்டப பூஜை
சுவாமி திருவீதியுலா வருதல் இடம்பெறும்.

31.12.2006 ஞாயிற்றுக்கிழமை துவாதசி உற்சவம்
அதிகாலை 3.30 மணி சுப்பிரபாதம்
அதிகாலை 3.50 மணி திருப்பள்ளியெழுச்சி
அதிகாலை 4.00 மணி மூலவர் அபிஷேகம்
காலை 5 மணி திருவனந்தல் பூஜை
காலை 5.45 மணி உதயபூஜை
காலை 6 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி திருவீதியுலா வருதல் இடம்பெறும்.

அடியார்கள் பால் இளநீர், துளசி பூ வகை அபிஷேக பூஜை திரவியங்களை உபகரித்து சுவர்க்கவாயில் தரிசனம் கண்டு ஸ்ரீ லஷ்மிவிலாஸ சம்பன்னராக வாழ்வீர்களாக.

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
வண்ணை. தொ.பே. 021 2222476
ஆதீன மஹாசபை.

## மணமகள் தேவை

1969 ஆம் ஆண்டு கிரகபாவம் 11 3/4, அத்தம் 4ஆம் பாதமுடைய யாழ்.இந்து கௌரவ குடும்பம் தற்பொழுது குருநாகல் மாவட்டத்தில் சொந்தக்கடை வைத்து குடும்பத்தாருடன் இருக்கும் மணமகனுக்கு படித்த நற்குணமுள்ள மணமகள் தேவை.
குறிப்பு: அங்கு போய் இருக்க விருப்பமுள்ளவர்கள்/கொழும்பில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. முதல் கடிதத்திலே குடும்பவிவரம் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல: 2942,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.
(65169)

16 வருட சேவையிலுள்ள தனியார் கல்வி நிறுவனம்
கொக்குவில்
## ஆசிரியர் தேவை
தரம் 6, 7,8 - தமிழ், சமூகக்கல்வி.
தரம் 6 - 11 - சமயம்.
தொடர்பு : 0779590521 (65174)

## ஆ சாரிகா லேணர்ஸ்

யாழ்.அரச செயலகத்தில் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான எழுத்துப்பரீட்சை, செய்முறைப் பரீட்சை நடைபெற இருப்பதால் எமது காரியாலயத்தில் சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்தவர்களும், விண்ணப்பிக்க உள்ளவர்களும் உடனடியாகச் சமுகம் தரவும். - நிர்வாகம்.

## விற்பனைக்கு

T.V(29'), வோசிங்மெசின், பிறிஜ் (டபிள்டோர்), தளபாடங்கள், கிறைண்டர், ஸ்கூட்டர் (ஆங்கில தொடரிலக்கம்), 1அல்சேசன் நாய் (பெண்), மீன் தொட்டி, மின்விசிறிகள் என்பன விற்பனைக்குண்டு. அத்துடன் அறைகளும் வாடகைக்குண்டு.
தொடர்பு : இல. 19, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், (மருந்தகத்திற்கு அருகில்) .T.P.: 5238

## தவறிவிட்டது

அல்லாரை தெற்கு, மீசாலையைச் சேர்ந்த நாகரத்தினம் உதயகுமாரி என்பவரது அடையாள அட்டை மற்றும் விசேட அடையாள அட்டையும் யாழ்.நகரில் இருந்து வரும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரியில் உள்ள மணியம் பத்திரிகை விற்பனை நிலையத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.



ஸ்ரீ நாகவரத
நாராயணர் தேவஸ்தானம்
சுவர்க்கவாயில் ஏகாதசி
நாகேஸ்வரம் - அளவெட்டி

மெய்யன்புடையீர்!
நிகழும் விய வருஷம் மார்கழி மாதம் 15ஆம் நாள் (30.12.2006) சனிக்கிழமை அதிகாலை 5மணிக்கு சுவர்க்கவாயில் தரிசனம் இடம்பெறும். தொடர்ந்து பின்வரும் நிகழ்வுகள் இடம்பெறும். அன்படியார் அனைவரும் வந்து தரிசித்து திருவருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

நிகழ்வுகள்

30.12.2006 சனிக்கிழமை
காலை 8.30மணி அபிஷேகம்.
காலை 10.30மணி வசந்தமண்டபப்பூசை.
காலை 11.00மணி எம்பெருமான் .
தேரில் எழுந்தருளி விதிவலம் வருவார்.
மாலை 6.00மணி சாயங்காலப் பூசை.
நள்ளிரவு 12.00 மணி அர்த்தசாமப் பூசை.

31.12.2006 ஞாயிற்றுக்கிழமை
அதிகாலை 2.00 மணி 1008 சங்காபிஷேகம்.
அதிகாலை 4.00 மணி வசந்தமண்டபப் பூசை.
அதிகாலை 5.00 மணி தீர்த்தோற்சவம்.

சனிக்கிழமை பி.ப 6.00 மணியிலிருந்து விஷேடகலை நிகழ்வுகள் இடம்பெறும் என்பதனையும் அறியத்தருகின்றோம்

நாகேஸ்வரம், அளவெட்டி
இங்ஙனம்,
பொறுப்புரிமைப் பரிபாலனசபை.

## 7ஆவது பிறந்த நாளில் 6ஆம் மாத நினைவஞ்சலி



# மகாலிங்கம் நிவேதன்

மலர்வு 29-12-1999
உதிர்வு 23-06-2006

அன்புச் செல்வமே நிவேத் குஞ்சு உன் நினைவுகளுடன் ஆறு மாதம் கழித்து விட்டன. நிவேத் நீர் இறைவனில் அமைதி பெற அவர் மலரடி இறைஞ்சுகின்றோம்.

தாளையடி லேன்,
திருநெல்வேலி.
குடும்பத்தினர்.
(65141)

## HND HND HND HND

BTEC
HND
World Class Qualifications
Delivered Locally...... Recognised Globally

New Batch Starts on
22 / 01 / 2007

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK. USA. Australia. Canada etc.

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

GCE A/L
with 2 Subjects

edexcel
INTERNATIONAL
Approved "A" Grade Training Centre

A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அநேகமானோர் பிரபல்யபல்கலைக்கழகங்களில் அனுமதிபெறுவதிலும் ( Admission ) உயர்கல்விக்கான Visaக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் உலகில் பிரபல்யமான BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc.(Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுக்கொடுத்து உயர்கல்விக்கான Visaக்களையும் உறுதிசெய்கின்றது.

IIS CITY CAMPUS
# 200, Sivan Pannai Road, Jaffna
TP No. : 021 222 8060 Fax : 021 222 6933 Email : iiscc@sltnet.lk

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும்





சற்குணம் செல்வநாயகம் (ஆசிரியர்)
தோற்றம் : 15 - 09 - 1923
மறைவு : 29 - 11 - 2006

செல்வநாயகம் தயாபரன்
தோற்றம் : 26 - 03 - 1962
மறைவு : 25 - 12 - 2005

கடந்த (29.11.2006) புதன்கிழமை சிவபதமடைந்த எம்து குடும்பத்தலைவர் சற்குணம் செல்வநாயகம் (செல்வரத்தின வாத்தியார்) அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (29.12.2006)வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார்,உறவினர்,நண்பர்கள்,மாணவர்கள் அனைவரும் கலந்துகொண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீபதி,
இணுவில் தெற்கு,
இணுவில்.
-குடும்பத்தினர்.
(65108)

# V.K.இராசரத்தினம்

95, ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் 27.12.2006இல் இருந்து 1C, ஸ்ரான்லி வீதியில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

V.K.இராசரத்தினம்,
1C. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரீ நதியா நகை மாளிகைக்கு அருகில்)

குறிப்பு:-
எம்மிடம் T.V ரேடியோக்கள் திருத்துவதற்காக ஒப்படைத்தவர்கள் 7.1.2007இற்கு முன் வந்து திரும்பப்பெற்றுக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதார வைத்தியசாலையின் 'அபயகரம்' வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை

## தள்ளாத வயதிலும் தளராத உறுதியோடு மக்கள் பணி செய்யும் கர்ம வீரர்

பல்லாயிரம் மக்களின் உள்ளம் கவர்ந்த உத்தமர் வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை அவர்களுக்கு நன்றிக் கடன்பட்ட சமூகம் எடுக்கும் பிரிவுபசார விழா. ஊன் உறக்கமின்றி மனிதநேயப் பணி செய்த மகத்தான மனிதன் இவர். வைத்தியத்துறையில் நாற்பத்தாறு ஆண்டுகள் ஓய்வின்றி உழைத்தவர். சட்டவைத்திய அதிகாரியாக விளங்கி இறந்தவர் நிலையையும் இரக்கத்தோடு ஆராய்ந்து தொண்டாற்றியவர். போரின் அவலத்திலும் இயற்கையின் சீற்றத்தால் பல்லுயிரும் பறிபோன கடற்கரையிலும் நள்ளிரவென்றும் பாராது நடமாடி நடமாடித் தன் பணி செய்த தகைமையாளன். தள்ளாடும் வயதிலும் தளராத உறுதியோடு மந்திகை வைத்தியசாலையை மக்களுக்கு உதவிட செயற்கரும் சேவைகள் ஆற்றிய செயல் வீரன். தன் இனிய மனையாளை இழந்து தவித்தபோதும், தன் அருமைப்பிள்ளைகள் நால்வரும் பிறதேசம் அழைத்த போதும் பொதுமக்களுக்குப் பணி செய்வதற்காக தன் சுயநலங்களை விட்ட கர்மவீரர். இத்தகைய சான்றோரை இன்றைய சூழலில் நாம் காண்பது அபூர்வம். நாம் செய்த நல்வினைப் பயனால் இப்பெருமகனின் ஆற்றுப்படுத்தலில் பணி செய்யும் பேறு பேற்றோம். ஆன்மீகப் பணி, ஆயுளைக் காக்கும்.பணி, ஆதரவற்றவர்களுக்கு உதவும் பணி என எத்தனை பணிகளைச் செய்த ஒப்புரவாளர். வைத்தியகலாநிதி ஐயாவை வணங்குகின்றோம். வாழ்த்துகின்றோம். அரசு உங்களுக்கு ஓய்வு தந்தாலும் உங்கள் அபயகரங்கள் என்றும் ஓயாது என்ற உறுதியோடு வாழ்த்துகின்றோம். பல்லாண்டு பல்லாண்டு நீவிர் வாழ்க! பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை உங்கள் ஆதரவை என்றும் போற்றும்.

நன்றிக் கடன் மிக்க
வைத்தியர்கள், தாதியர், அலுவலர்கள்,
ஊழியர்கள், பணியாளர்கள்,
பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை.



வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை அவர்களின் இனிய வாழ்வில் அரச மருத்துவப் பணி

46 வருட சேவையில்....

| | |
|---|---|
| * வைத்தியராக நியமனம் பெற்ற திகதி | - 15.04.1961 |
| * பெரியாஸ்பத்திரி, கொழும்பு | - 1961 - 1962 |
| * மாவட்ட வைத்தியசாலை, அவிசாவளை | - 1963 - 1965 |
| * தொற்றுநோய் வைத்தியசாலை, அங்கொட | - 1965 - 1969 |
| * சுகாதார வைத்திய அதிகாரி, கிளிநொச்சி | - 1969 - 1971 |
| * மாவட்ட ஸ்வத்தியசாலை, கிளிநொச்சி | - 1971 - 1974 |
| * ஆதாரவைத்தியசாலை, பருத்தித்துறை | - 1975 - 1980 |
| * ஆதாரவைத்தியசாலை, திருகோணமலை | - 1980 - 1982 |
| * மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை | - 1983 - 1987 |
| * ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை | - 1987 - இற்றை வரை. |









மேலைநாட்டு வைத்தியரை மந்திகைக்கு பணி செய்ய வைத்த பண்பாளர்

வாழ்த்துபவர்கள் :
1) மகாராணி பட்டுச் சோலை,
50, பெரியகடை, யாழ்ப்பாணம்.
2) இலங்கை வங்கி, பருத்தித்துறை.

# மரண அறிவித்தல்கள்

## துரைராசா இராஜசிங்கம்



(ஓய்வுபெற்ற கடற்படைக் களஞ்சியப் பொறுப்பாளர், யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா இராஜசிங்கம் 26.12.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசா - நாகரத்தினம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற திருமதி மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற துரைசிங்கம், திருமதி இராஜபாக்கியம் (நியூசிலாந்து), திருமதி ராஜேஸ்வரி (நியூசிலாந்து), திருமதி ராசமலர் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சிவசோதி, திருமதி மகாலட்சுமி, மகாதேவா (நியூசிலாந்து), அரசரட்டினம் (நியூசிலாந்து), ராஜசிங்கம் (நியூசிலாந்து) ஆகியோரின் மைத்துனரும் பத்மநாதன், சத்தியநாதன், யசோதா, ரோகான், ரோகினி, குமார், ரமேஷ், சிவகுமார், ராஜ்குமார், சத்தியேந்திரன், நிர்மலேந்திரன், இந்திரா (ஆஸ்திரேலியா), ரவி, ரோசனா ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(29.12.2006) வெள்ளிக்கிழமை முற்பகல்10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காகக் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

124, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (65183)

தகவல்:
தளையசிங்கம் சண்முகநாதன்(மைத்துனர்),
சுகிர்தம் சிவானந்தம்,
சுந்தரலிங்கம் விஜயராணி (சகோதரர்கள்).

## பொன்னுத்துரை நடராசா



லோட்டஸ் றோட், வ்ண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை நடராசா 24.12.2006 இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த பொன்னுத்துரை - செல்லம்மா தம்பதியரின் மகனும் புளியங்கூடலைச் சேர்ந்த காலஞ்சென்ற ஐயாத்துரை - மீனாட்சி தம்பதியரின் மருமகனும் கெங்காலட்சுமியின் கணவரும் மங்கையர்க்கரசி, மகேஸ்வரி, காலஞ்சென்ற மதிமுகராசா ஆகியோரின் சகோதரனும் நவநீதன் (ஜேர்மனி), பிரான்ஸைச் சேர்ந்த நகுலேஸ்வரன், நாகேஸ்வரன், நவரஞ்சன், நந்தகுமார், இந்தியாவில் வசிக்கும் நவசீலன், நவஜீவிதா ஆகியோரின் தந்தையும் விஜயகுமாரி(பிரான்ஸ்), சுஜாத்தா(இந்தியா), சுகன்ஜா (பிரான்ஸ்), திவ்வியா(பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் ஜெனிபர் (ஜேர்மனி), ஆராதனா (பிரான்ஸ்) , சங்கீதா, கவியரசி(இந்தியா),சகானா(பிரான்ஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.12.2006 ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 32, A.G.S.காலனி
2 ஆவது ஒழுங்கை,
பாலாஜிநகர்,
கீழ்கட்டளை.
சென்னை-600117
தொ.பே.: 0091 4422476139,
0091 98404 184 62 (65140)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.


## நாவலர் வெளியீடு

தரம் 5

புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள் - 2007
(தனியார் கல்வி நிறுவனங்களுக்கான வெளியீடு)

எதிர்வரும் 2007 ஆம் ஆண்டில் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான தொடர் பரீட்சை எதிர்வரும் 31.12.2006 (ஞாயிறு) முதல் நடைபெறவுள்ளது வினாத்தாள் தேவைப்படும் கல்வி நிலையங்கள், பிரத்தியேக வகுப்புகள் 29.12.2006 வெள்ளிக்கிழமைக்கு முன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.


## தவறிவிட்டது

உத்தரிய மாதா கோயிலடி, வசாவிளான் என்னும் முகவரியைச் சேர்ந்த ஞானசேகரம் ஸ்ரான்லி மோகன்ராஜ் என்பவரது தேசிய அ.அட்டை (722930509V)சாரதி அனுமதிப்பத்திரம் என்பன 23.12.2006 அன்று சுன்னாகம் அசெம்பளி ஒவ்கோட்டுக்கும் சுன்னாகம் ஸ்ரேசனுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஞா.மோகன்ராஜ் ஸ்ரேசனடி, சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.
தொ.பே.: 077 9184079

## தவறிவிட்டது

12.12.2006 திருகோணமலை - யாழ்ப்பாணம் கப்பல் பயணத்தின்போது 3 அல்பங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 021 226 3937 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உதவுங்கள். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தகவல்: வேஜினி யேசுதாசன்
ராஜு இல்லம்
சென்.தோமஸ் லேன், பருத்தித்துறை.

## காணி தேவை

இணுவில் , உரும்பிராய், கோண்டாவில், ஊரெழு பகுதிகளில் 1 அல்லது 1 ½ பரப்புக்காணி உடன் தேவை. தோட்டப் பகுதியில் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா சாந்தலட்சமி
(பரி இம்மானுவேல் தேவாலயம் அருகில்)
பலாலி றோட், உரும்பிராய்.
தொ.பே. 0776618144


## சிறு விமான சேவை

யாழ். - கொழும்பு விமான சேவைகள்
தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது.
உடனடிப் பயணம்.
தொடர்பு:- தொ.பே.: 0112721789,
0114964994, 0785788811,
0785325501


# 31 ஆம் நாள் நினைவலைகள்



திருமதி
பூதப்பிள்ளை சின்னம்மா

மண்ணில் 21- 08- 1908
விண்ணில் 29 - 11 - 2006

அன்பின் சிகரமாய்
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் வழிகாட்டலாய்
எம்மையெல்லாம் வளர்த்தாய் - அம்மா
இன்று எம்மை விட்டு எங்கு பிரிந்து சென்றாய்
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

'ஜெனனி பவள்',
அங்களப்பாய்,
இணுவில் கிழக்கு,
இணுவில். (65111)

உங்களை என்றும் மறவாத
மகன் -சண்முகநாதன் (பட்டு),
மருமகள், பேரப்பிள்ளைகள்.

# சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி
ஆலாலசுந்தரம் செல்லம்மா
(பிள்ளை அக்கா)

மலர்வு 24- 04- 1924
உதிர்வு 14 - 12 - 2006

கடந்த 14.12.2006 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது தாய் ஆலாலசுந்தரம் செல்லம்மா அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டோர் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தோர், அஞ்சலி ஆறுதல் தெரிவித்தோர் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, அன்னாரின் சபிண்டீகரணக்கிரியைகள் இன்று(29.12.2006)வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சந்தை வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர். (51668)

மகன் ஆலாலசுந்தரம் பரமேஸ்வரன்,
மகள் தாமகௌரி சிவகணேசன்,
மகள் கேதாரகௌரி சபாரத்தினம்,
மகள் அமிர்தகௌரி சண்முகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட கணித வகுப்புகள்

2007 ஆம் ஆண்டிற்கான ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 11இற்கான வகுப்புகள் ஆரம்பம்.

29.12.2006

ஆசிரியர் சுரேந்திரன்

★ அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.
★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

உரும்பிராய் தெற்கு, (ஞானவைரவர் கோயில் அருகில்) (65132) கொட்டைக்காடு வீதி, கோண்டாவில் கிழக்கு, (டிப்போ அருகில்).

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் **ஆசை சின்னையா**

மலர்வு 01.10.1938 உதிர்வு 30.11.2006

எமது அன்புத் தலைவரின் பிரிவுச் செய்தி கேட்டு,எம்துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, நாளை(30.12.2006) சனிக்கிழமை எம் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின் றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் தெற்கு, புதுமடம், மானிப்பாய். (65195) குடும்பத்தினர், மகள் சி.வசந்தி.

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி கலாவதி ஜெகதீஸ்வரன் (கலா)

மலர்வு 27.10.1961 உதிர்வு 05.01.2001

திதி: 29.12.2006 தசமி

அன்புமகளே!
எங்கள் உயிர் உள்ள வரைக்கும்
என்றும் உமது நினைவு எங்கள்
மனங்களில் நிறைந்திருக்கும்
உமது ஆத்மா சாந்தி பெற
விநாயகரை வணங்குகின்றோம்.

அரச வீதி, உரும்பிராய் கிழக்கு. (65193) உமது நினைவில் அப்பா, அம்மா, குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி **கந்தையா அன்னம்மா**

மலர்வு 02.03.1927 உதிர்வு 29.11.2006

29.11.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (29.12.2006) வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க.அருமைத்துரை, நாகபூஷணி அம்மன் வீதி, கோண்டாவில் கிழக்கு. [65008] மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## அம்மாவின் ஓராண்டு நினைவேந்திக் கண்ணீர்ப் பொழிவுகளால் நாம் செலுத்தும் அஞ்சலிகள்

29.12.2006

வையத்தில் வாழ்வுக்காக 12 - 04 - 1935



தெய்வத்தில் ஒய்வுக்காக 09 - 12 - 2005

அமரத்துவத் தாய்

**திருமதி பவளம் வைரமுத்து**

எங்களுக்கு விளக்காக நெய்யாக திரியாக
சுடராக விளங்கினீர்கள் உண்மை அம்மா
எங்களுக்கு அவ்விளக்கு இன்றைக்கு இல்லையில்லை
நாம் நடக்கும் பாதை இன்று இருண்டதுண்மை
அம்மா என்றெங்கள்வாய் சொல்லாத நாளில்லை
எங்களின் நெஞ்சத்தில் பதிந்தவர் நீங்களம்மா
இம்மா நிலத்தல் நாம் வாழ்கின்ற நாள்வரை
நீங்களே எம்முள்ளக் கோயிலில் தெய்வமம்மா.

சுகுணபவனம், கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். [65008] நீங்கள் விட்டுச்சென்ற இரத்தினங்கள் வைரமுத்து குடும்பம்.

## தவறவிட்டது

யாழ்ப்பாணம், 103, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடியைச் சேர்ந்த பேரின்பநாதன் தேன்மொழி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (796983418V), தொழில் அடையாள அட்டை, விசேட அ.அட்டை பிரதான வீதிக்கும் யாழ். நகரத்திற்கும் இடையில் தவறிவிட்டது .கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்து உதவவும் சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 021 222 5636, 077 9184252

## வேலையாள் தேவை

கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு விற்பனையாளரும், கணக்காளரும், உதவியாளரும் தேவை.(இருபாலரும்) நேரில் வரவும்.

தொடர்பு:
யாழ்.போன்சொப்
இல.10, நவீன சந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம், தொ.பே.: 222 3817

## மூன்றாம் ஆண்டு நினைவில்



அமரர் **மு.செல்வராசா**
(C.T.B., I.D. கோண்டாவில்)

மலர்வு 11.04.1952 உதிர்வு 01.01.2004

ஆண்டு மூன்றுகள் சென்றது
ஆறாது எம் துயரம்
நீண்டொரு பயணத்தில்
நீர் சென்ற நாளிதுவே!

நீதிமன்ற வீதி, மல்லாகம். குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 06 - 07 - 1977



மறைவு 29 - 11 - 2006

**ரமணிபாஸ்கரன் வசந்தநிதி**

கடந்த 29.12.2006 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கு ரமணி பாஸ்கரன் வசந்தநிதி அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று (29.12.2006) வெள்ளிக் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

மேற்படி நிகழ்விலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஜெ.ரமணிபாஸ்கரன் (கணவர்),
ர.ரேணுசன் (மகன்),
நாகம்மாள் கோயில் வீதி, உடுவில், சுன்னாகம். [65029] தகவல்: ஜெயக்குமார் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

திருமதி செல்லம்மா சுப்பிரமணியம்



புன்னாலைக்கட்டுவன், ஈவினையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சுப்பிரமணியம் நேற்று (28.12.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - தங்கப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் கமலாம்பிகை (கனடா), அருளானந்தம் (லண்டன்), தணிகாசலம் (கனடா), காலஞ்சென்ற குமாரசாமி, ராஜலக்ஷ்மி, (நல்லூர்) ஆகியோரின் பாசமிகு தாயும் குருமூர்த்தி, சகுந்தலா, நிர்மலா, சகிந்தா (லண்டன்), புவனேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2006) வெள்ளிக்கிழமை இலக்கம், 96, சிவன் கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன் கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி. 021 222 2184. தகவல்: புவனேந்திரன் (மருமகன்), நல்லூர். [65202]

## ஆத்மசாந்திக் கிரியை அழைப்பு



04.12.2006 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**சுப்பிரமணியம் வையாபுரி**

(ஓய்வுபெற்ற பிரதம புகையிரத நிலைய அதிபர்)

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு பல வழிகளிலும் எமது துயரத்தில் பங்குகொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், நாளை (30.12.2006) சனிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்)

24, பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [65002] வை.சுரேஸ் G.S.(மகன்) மற்றும் குடும்ப உறுப்பினர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வன் **பஞ்சரத்தினம் பிரணவன்**



தோற்றம் 03 - 08 - 1981 மறைவு 09 - 01 - 2006

திதி: தசமி

பாசமுள்ள என் பிரணவா!
பாரினில் நீயேயென் ஒளிவிளக்கென
எண்ணமதில் எண்ணிய எனக்கு
எல்லையில் வேதனைகள் எஞ்சவிட்டு
புரியாத புதிராய் புதைந்திடினும் - உன்
பூ முகம் என்றும் மறையாதைய்யா!
ஒன்றென்ன ஓராயிரம் ஆண்டெனினும்
ஓயாது என்னுள்ளமதில் உறைந்திருப்பாயட மகனே!
உன்ஆத்மா சாந்தி பெறுவதாக!

ஜெயபதி, ராஜபாதை, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். தாய்.

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தேற்றம் 21 - 05 - 1944



மறைவு 19 - 12 - 1996

**அமரர் இராசம்மா சுப்பிரமணியம்**

திதி:29.12.2006

அன்பே உருவாய்
பண்பே சிகரமாய்
பாசத்தின் இருப்பிடமாயிருந்த
பார்போற்றும் எம் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிருவத்தம்பை, உடுப்பிட்டி வடக்கு, வல்வெட்டித்துறை. [65093] தகவல்: குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி **வனிதாமணி தேவராஜா**

தோற்றம் 12 - 01 - 1953 மறைவு 29 - 11 - 2006

29.11.2006 இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கண்ணீர் அஞ்சலிகள், அனுதாபச் செய்திகளை பத்திரிகைகளிலும்,தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் தெரிவித்தும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (29.12.2006) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

188, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [65093] கணவர், பிள்ளைகள், மருமகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

## இலங்கைக்கு ஒரு புதிய நோய்!

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது, மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறை கொள்ளாமை என்பன குறித்துச் சாடி வந்த வெளி உலகம் - சர்வதேசம் - இப்போது இந்த நாட்டில் ஊழல்கள் மலிந்து வருவதை கண்டிக்கத் தொடங்கி உள்ளது.

இந்த வரிசையில், அமெரிக்காவின், ஆசியப் பிராந்தியங்களுக்கான வெளியுறவுக் கொள்கைக் குழு வெளியிட்டிருக்கும் அறிக்கையில், இலங்கையில் ஊழல்கள் மலிந்து வருவதை - அவற்றைக் கட்டுப்படுத்துவதில் அக்கறை இல்லாத போக்கை - கடும் தொனியில் எச்சரித்திருக்கிறது.

இலங்கை அரசாங்கம், ஊழல் பெருகுவதை ஒரு பிரச்சினையாகவே எடுத்துக்கொள்வதில்லை என்று எள்ளி நகையாடி இருக்கிறது அமெரிக்க செனெட்டின் குழு.

ஒரு நாட்டில் நல்லாட்சி நிலவுவதற்கு, லஞ்சம், ஊழல் என்பன ஒழிக்கப்பட வேண்டும். கீழைத்தேச நாடுகளில் இவை இரண்டும் அரசாள்வோர் மட்டத்திலும் சமூக மட்டத்திலும் உண்டு என்பது மறுக்க முடியாத, தர்க்கத்துக்கு எடுத்துக்கொள்ள இயலாத உண்மை.

ஆனாலும், மேலை நாடுகள் இது விடயத்தில் மிகச் சுத்தமானவை என்று சொல்வதற்கில்லை. ஆயினும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு, இயன்றளவு குறைத்துக்கொள்வதில் அக்கறையும் உணர்வும் அவற்றுக்கு அதிகம். அதற்கான கடும் சட்ட விதிகளும் அவற்றைப் பாகுபாடின்றி நடைமுறைப்படுத்தும் வழக்கமும் மேலோங்கி நிற்பதை அந்நாடுகளில் காணலாம்.

கீழைத்தேச நாடுகள் லஞ்சம் மற்றும் ஊழல்களைத் தடுப்பதற்கு முயன்றாலும், அல்லது அவ்வாறு முயல்வதாகக் காட்டிக்கொண்டாலும், மிகவும் குறைந்தளவு முன்னேற்றமே மிஞ்சுகிறது.

அவற்றிலும், குறிப்பாக ஆசிய நாடுகளில் லஞ்சமும் ஊழலும் தலைவிரித்து ஆடுவது என்று சொல்வதை விடக் கோரத் தாண்டவம் ஆடுகிறது என்பதே பொருத்தம். இலங்கையும் அந்தக் குழுவைச் சேர்ந்ததே.

சமூகத்தின் கீழ் மட்டம் தொடங்கி அரசாளும் வர்க்கம் வரையான நீண்ட பெரிய வரிசையில் அடங்குவோர், லஞ்சம் மற்றும் ஊழலை தமது வாழ்க்கையின் ஓர் அம்சமாக்கிக் கொள்கிறார்கள். அது குறித்து அவர்கள் வெட்கப்படுவதுமில்லை. அவற்றைக் குற்றங்களாகக் கருதுவதுமில்லை. தமக்கு நயம் தரும் முன் சொன்ன இரண்டு சமூக விரோதச் செயற்பாடுகளை அச்சமோ வெட்கமோ இல்லாது கைக்கொள்கிறார்கள். அதனை ஒரு நிரந்தரமான பழக்கமாக்கிக்கொள்கிறார்கள். அதுவும் ஒரு வாழ்க்கை முறை என்ற "பெருமையோடு" செய்கிறார்கள்.

எங்கும் எதிலும் லஞ்சம், அங்கும் இங்கும் ஊழல் என்றவாறு அவை நாட்டில் பரவிப் படர்ந்து மக்களை இம்சைப்படுத்துகின்றன். தமக்கு வேண்டியதை அடைவதற்கு ஊழல் புரிந்து கொள்பவர்கள் மலிந்து போயுள்ள காலம் இது.

இதனை அமெரிக்க செனெட் குழு இப்போது தான் கண்டு பிடித்திருக்கலாம். சமுதாயத்தை நாசம் செய்யும் ஊழலும் லஞ்சமும் தலைவிரித்தாடும் நாடுகளின் பட்டியலில் இலங்கையையும் சேர்த்திருப்பதால் உடனடியாக அவை குறைந்து போகுமா?

பொதுவாக, அரசாங்கத் துறைகளில் இந்த இரண்டு சமூகத் துரோகங்களும் தாராளமாக இடம்பெறுகின்றன. தட்டிக் கேட்க எவருமில்லாவிடில் தம்பி சண்டப் பிரசண்டம் என்பது போல, எல்லையற்ற விதங்களில் அவை பெருகி வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு லஞ்ச ஊழல் ஆணைக்குழு ஒன்று இயங்கினாலும் எலிகள் பிடிபடுவதும் முதலைகள் தப்பிவிடுவதும் சர்வசாதாரணம்.

அரசியல் தலைவர்கள் உட்பட சமூகத்தின் சகல மட்டங்களிலும் ஊழல் பரவிப் படர்ந்திருப்பதால், ஆட்சியில் உள்ளவர்களும் அவற்றில் அடிக்கடி சம்பந்தப்படுவதால், அவை தடுக்கப்படும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. தன்னைத் திருத்திக் கொள்ளாமல் பிறரைத் திருத்துவது மிகவும் கடினம். ஆகையால் இன்றைய போக்கில் ஊழலை ஒழிப்பது என்பது சாத்தியமாகப் போவதில்லை.

இலங்கையையும் ஊழல் மலிந்த நாடுகளில் ஒன்றாகப் பட்டியலிட்டுள்ள அமெரிக்கா, அதன் மூலம் இலங்கையை, இலங்கை அரசை என்னதான் செய்து விட முடியும்?

லஞ்சம், ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்க வேண்டும் என்று அழுத்தம் கொடுப்பதைத் தவிர அதனால் வேறு எதனைத் தான் சாதிக்க முடியும்?

நிதி உதவி வழங்குதலை குறைத்து நல்லாட்சி செய்யுமாறு அரசாங்கத்தை அமெரிக்கா வலியுறுத்தலாம். ஆனால் அந் நாடு அந்த வழியை நாடாது.

மனித வாழ்வின், மிக உயர்ந்த விழுமியமான அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதை சுட்டிக்காட்டி, நிதி உதவி வழங்குதலை நிறுத்தாத அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் -

இலங்கையில் லஞ்சம், ஊழலைக் குறைப்பதற்கு நிதி வழங்கலை தொடர்பு படுத்தி அழுத்தம் கொடுக்கும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை.

எனினும், இலங்கை அரசாங்கத்துக்கு வெளி உலகில் உண்டாகிவரும் வடுக்களுடன் ஊழல் பெருக்கமும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பது இலங்கைக்கு ஒரு புதிய நோயே!

# குடாநாட்டில் மனித உரிமை மீறல்கள் சர்வ சாதாரணமாக இடம்பெறுகின்றன

## ஐ.எஸ்.ஓ. பிரதிநிதியிடம் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.29

காணாமற்போதல், கைது செய்யப்படுதல், படுகொலைகள், போன்ற மனித உரிமை மீறல்கள் தற்போது குடாநாட்டில் சர்வ சாதாரணமாக இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் இச்சம்பவங்கள் மேலும் மேலும் அதிகரித்துச் செல்லும் ஒரு அபாயமான சூழ்நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறு உலகத் தொழிலாளர் ஸ்தாபனத்தின் (ஐ.எஸ்.ஓ) இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியிடம் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

உலகத் தொழிலாளர் ஸ்தாபனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரைன் ஸ்ரேர் மோஸ் அம்மையார் குடாநாட்டுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளை அவர்களது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் உலகத் தொழிலாளர் ஸ்தாபனத்தின் பிரதிநிதி கௌரி பொன்னையாவும், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் சார்பில் அதன் தலைவர் ஏ.கே.சிவசுப்பிரமணியம், செயலாளர்வி.ஸ்ரீசக்திவேல் மற்றும் பி.விக்கினேஸ்வரன், ரி.தேவானந், அருட்திரு ஜி.ஜி.ஜெயக்குமார், பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம், திருமதி என்.ஜெகதீசன், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சோதிநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

குடாநாட்டில் மிக மோசமாகி இடம் பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள், காணாமற் போதல், கைது செய்யப்படுதல், படுகொலைகள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் உலகத்தொழிலாளர் ஸ்தாபனத்தின் பிரதிநிதிகளிடம் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

அத்துடன் குடாநாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறை, நோய்களின் தாக்கம், மருந்துப் பொருள்கள் தட்டுப்பாடு என்பன குறித்தும் இதில் சுட்டிக்காட்டப்பட்டது.

முன்னதாக உலகத் தொழிலாளர் ஸ்தாபனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி யாழ்.செயலகத்தில் அரச அதிபரையும் சந்தித்து குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடினார். (1-8)

## ஊழல்களை இலங்கை அரசு பிரச்சினையாகவே எடுப்பதில்லை

### சாடுகின்றது அமெரிக்க காங்கிரஸ் குழு

வாஷிங்டன், டிசெ.29

இலங்கை அரசாங்கம் ஊழலை ஒரு பிரச்சினையாகவே கண்டுகொள்வதில்லையென்று அமெரிக்க காங்கிரஸ் சபையின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசியப் பிராந்திய நாடுகளுக்கான செனட் வெளியுறவுக் கொள்கைகளுக்கான குழு மேற்கொண்ட விஜயம் ஒன்றின் அடிப்படையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை நாட்டிற்குள் அரசசார்பற்ற அமைப்புகள் செயற்படுவதற்கு போதுமான வசதி செய்து கொடுக்கப்படுகின்றது என்பதை ஆய்வுகள் உறுதிப்படுத்தவில்லையென அறிக்கை தெரிவிக்கின்றது.

கண்காணிப்பு நிறுவனங்கள் அரசியல், பொருளியல் மற்றும் உடல் அளவில் அச்சுறுத்தப்படுகின்றன என்ற விடயத்தில் ஒருமித்த கருத்து இல்லாது போனாலும், ஊழல் என்பதை ஒரு பிரச்சினையாகவே இலங்கை அரசு எடுத்துக் கொள்வதில்லை என்பதில் ஒத்த கருத்து நிலவியது என்று காங்கிரஸ் சபையின் அறிக்கை தெரிவிக்கின்றது.

பிராந்தியத்தின் ஜனநாயகம் குறிப்பாக அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலமான அமெரிக்க நிதி உதவித் திட்டங்கள் செயற்படும் விதம் குறித்து ஆராய்வதையே செனட் சபையின் வெளியுறவுக் குழு நோக்கமாகக் கொண்டிருந்தது.

பிராந்தியத்தின் ஜனநாயகம் மற்றும் நல்லாட்சியை வளர்ப்பதற்கு அமெரிக்க அரசாங்கம் உள்ளூர் உணர்வுகளைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அறிக்கை வலியுறுத்தியுள்ளது.

தாய்லாந்து, இந்தோனேஷியா, கம்போடியா மற்றும் சிறிலங்கா ஆகிய நாடுகள் இந்த ஆய்வில் உள்ளக்கப்பட்டிருந்தன. ஆபிரிக்கா, மத்திய ஐரோப்பா மற்றும் லத்தீன் அமெரிக்கப் பிராந்தியம் ஆகிய விசாலமான ஆய்வின் ஓர் பகுதியாகவே ஆசியப் பிராந்தியம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

அவ்வப்போது அரசியல் பிரமுகர்களை குறிவைப்பதையோ, அவர்களின் நலன்களை வள்ர்ப்பதிலோ கவனம் செலுத்துவதை விடுத்து, ஆசியாவின் அமெரிக்க நிதி வழங்கும் திட்டமானது ஜனநாயக நிறுவனங்களை வளர்த்தெடுப்பதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். இதற்கு கலாசார மற்றும் தேசிய உணர்வுகளை அங்கீகரிப்பது அவசியமாகின்றது - என்று அறிக்கை தெரிவிக்கின்றது. (ப்)

## வடமராட்சியில் கிளைமோர்; மாணவன் காயம்

யாழ்ப்பாணம்,டிசெ.29

வடமராட்சியில் மந்திகைச் சந்திக்கும் மடத்தடிச் சந்திக்கும் இடையில் பிரதான வீதியில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலின் போது சிறுவன் ஒருவன் காயமடைந்தார்.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு இடம்பெற்ற இச் சம்பவத்தில் இராணுவத் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை என அறியப்படுகிறது.காயமடைந்த ஹாட்லிக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவனான ஜெயசிங்கம் இளவேந்தன் (வயது 19) என்பவர் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (1-15-115)

## ஒளி விழா

வலி.தெற்கு பிரதேச செயலக வருடாந்த ஒளி விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சி.திருவாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (203)

## முன்பள்ளி ஆரம்ப விழா

மானிப்பாய்,டிசெ.29

மானிப்பாய் அரும்புகள் பாலர் பாடசாலையின் ஆரம்ப விழா நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு நிலையத் தலைவர் ஆ.வாஷிங்டன் தலைமையில் நடைபெறவுள்ளது. (1)

## சுகாதார முகாமைத்துவ உதவியாளர் பரீட்சை யாழ்ப்பாணத்தில்

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடைபெறவிருந்த சுகாதார முகாமைத்துவ உதவியாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 3ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் அன்றையதினம் முற்பகல் 11 மணிக்கு யாழ்.வைத்தியசாலைப் பணிப்பாளர் அறைக்கு வருகை தருமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். (1-202)

## ஆறாம்தர அனுமதி

யாழ்.இந்துக் கல்லூரியில் அடுத்த ஆண்டில் தரம் 6 இற்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் இன்று தொடக்கம் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை கல்லூரி அலுவலகத்தில் விநியோகிக்கப்படும் என்று கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

## நாளை

மார்கழி 15
சனிக்கிழமை
30.12.2006
திதி : ஏகாதசி
பின்னிரவு 01.15
நட்சத்திரம் : பரணி
பின்னிரவு 12.52
சுபநேரம் : 03.29 - 04.59
ராகுகாலம் : 09.29 - 10.59

## அத்தியாவசிய சேவைகள் குறித்து யாழ்.செயலகத்தில் நேற்று கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.29

குடாநாட்டு மக்களின் தற்போதைய பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கான அத்தியாவசிய சேவைகள் கூட்டம் நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்றது.

யாழ்.அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில மக்கள் எதிர்நோக்கும் உணவுப் பற்றாக்குறை, மருந்துத் தட்டுப்பாடு, விவசாயிகள், கடற் றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உட்பட பல முக்கிய விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், மனித நேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (8)

## புதிய திட்டங்களை வகுத்து சமூகப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்

### சமூக சேவையாளர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ.29

யாழ்.குடாநாட்டில் தற்போதுள்ள சூழ்நிலையில் பொதுமக்கள் முகம் கொடுத்து வருகின்ற சமூகப்பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்க்கக் கூடிய புதிய திட்டங்களை இணைத்து சமூகப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார் என அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள அவரது அலுவலகத்தில் வைத்து சமூக சேவை உத்தியோகத்தர்களையும், சமூக அபிவிருத்தி உதவியாளர்களையும் சந்தித்துப் பேசிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். பழைய திட்டங்களையே மென்மேலும் செயற்படுத்திக் கொண்டிருக்காமல் இன்றைய சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு புதிய திட்டங்களையும் வகுத்து செயற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் தெளிவுபடுத்தினார்.

யுத்த சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்டுள்ள குடாநாட்டு நிலைமைகளின் யதார்த்த நிலை அறிந்து சமூகப் பணிகளைத் திட்டமிட்டு நேர்மையான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்திக் கூறிய அமைச்சர், குடாநாட்டில் சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் தமது பணிகளை மேற்கொள்வதில் உள்ள தடைகள் மற்றும் இடையூறுகள் தொடர்பாகவும் கேட்டறிந்தார்.

குடாநாட்டில் உடனடியாக மேற்கொள்ளக் கூடிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கு விளக்கிக் கூறிய அமைச்சர், மேற்படி வேலைத்திட்டங்களை துரிதமாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி அவர்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார் - எனவும் அமைச்சின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுத் திட்ட யோசனைகளை ஐ.தே.கட்சியும் சமர்ப்பிக்கின்றது

கொழும்பு, டிச. 29

இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தம்மால் தயாரிக்கப்பட்ட அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை அடுத்த மாதம் நடைபெறவுள்ள அனைத்துக் கட்சிக் குழுக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சமர்ப்பிக்கவுள்ளது என இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சர்வ கட்சிக் குழுக் கூட்டத்தில் ஐ.தே. கட்சியின் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.என். சொக்ஸியும், ஜி.எல். பீரிஸும் கலந்து கொள்வார்கள் எனவும் - தமது தீர்வுத் திட்டம் ஒஸ்லோ மற்றும் டோக் கியோ பிரகடனங்களின் அடிப்படை யில் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் கட்சியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த ரணில் விக்கிரமசிங்க, அமைதிப் பேச்சுகளின் தேக்கநிலை தொடர்பாகக் கலந்துரையாடியிருந்தார். அதன்போது மஹிந்த, அனைத் துக் கட்சிக் குழுவின் இறுதி அறிக்கைகாகத் தாம் காத்திருக்கிறார் எனத் தெரிவித்திருந்தார்.

அனைத்துக் கட்சிக்குழுவின் பெரும்பாலான உறுப்பினர்களின் கருத்தினை நான்கு உறுப்பினர்கள் எதிர்த்ததாலும், அண்மையில் ஜே.வி.பி. அதிலிருந்து விலகியதாலும் அனைத்துக் கட்சிக் குழுவில் பிளவு தோன்றியுள்ளது.

அனைத்துக்கட்சிக்குழுவின்தலைவரும், விஞ்ஞான தொழில்நுட்பத்துறை அமைச்சருமான திஸ்ஸ விதாரணவும் அரசு சார்பாகத் தீர்வுத் திட்டம் ஒன்றை அடுத்த மாதம் முன்வைக்கவுள்ளார் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## அதிரடிப்படை சுட்டு இளைஞர் பலி

கொழும்பு, டிச. 29

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி - குருக்கள்மடம் பகுதியில் இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் நண்பகல் சுட்டுக் கொல்லப்பட்டுள் ளார்.

## புளொட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திச் சென்றவர்கள் ரி-56 ரகத் துப்பாக்கிகள் மற்றும் கைத்துப்பாக்கிகளை வைத்திருந்தனர் என்று கடத்தலை நேரில்கண்டவர்கள் கூறினர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தப்பட்டவர்களில் ஒருவரான 'மாமா' என்றழைக்கப்படும் பாக்கியராஜா என்பவர் புளொட் இயக்கத்தின் உயர்மட்ட உறுப்பினர். மட்டக்களப்பு மாவட்ட பொறுப் பாளராகவும் செயற்பட்டு வந்த இவர் பல பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டவர் என்றும் தெரிவிக்கப் பட்டது. (த-03)

## சர்வகட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வம் நேற்றுக் காலை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. அங்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

''இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டுமென்ற நோக்கிலேயே நானும், ஜனாதிபதியும் பேச்சு நடத்தினோம். அதன் பின்னர் எமது இரு கட்சிகளின் பிரதிநிதிகளும் பேச்சுகளை நடத்தினர். இதில் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்த பின்னரே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத் திடப் பட்டது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசியல் தீர்வு காணவேண்டுமென்பதே எமது நிலைப்பாடாகும். எனவே, இது விடயத்தில் நாட்டின் நலனைக் கருத்திற் கொண்டு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும்.''

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ)

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கியதையடுத்து அந்த இரு மாகாணங்களையும் பிரித்து விடும் முயற்சியில் அரசு தற்போது தீவிரமாக இறங்கியுள்ளது.

அதற்கமைவாகவே தற்போது கிழக்கிற்குத் தனியான ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கிற்குத் தனித் தனியாக செயலாளர்களும், அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனவரி மாதத்திலிருந்து இரு மாகாணங்களும் தனித் தனியாக இயங்குவதற்காக அத்தனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு விட்டன என்று அறிகின்றோம்.

இந்த முயற்சியானது உண்மையில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை மீறும் பாரிய நடவடிக்கையாகும். இது தொடர்பாக நாடாளுமன்றில் சட்டமூலம் ஒன்று கொண்டு வரப்பட்டால் அதனை மையமாகக் கொண்டே இந்தப் பிரிப்புக்கு ஆதரவு வழங்குவதா இல்லையா என்பது பற்றி எம்மால் சொல்ல முடியும்.

வடக்கு - கிழக்கு மீண்டும் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ இணைந்திருப்பதற்காக நாடாளுமன்றில் சட்டமூலம் ஒன்றை அரசு கொண்டுவந்தால் அதற்கு ஆதரவு வழங்குவது பற்றி நாம் பரிசீலிப்போம் என்று நாம் ஏற்கனவே சொல்லியிருந்தோம். ஐக்கிய தேசியக் கட்சியின் அந்த நிலைப்பாட்டில் எந்த வித மாற்றமுமில்லை.

வடக்கு - கிழக்கை நிரந்தரமாகப் பிரித்து விட அரசு எந்த விதமான முயற்சிகளை மேற்கொண்டாலும் எமது நிலைப்பாடு இதுவாகவே இருக்கும்.'' - என்றார். (ஐ)

## சண்டே லீடர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குரல் எழுப்பினர்.

அங்கு திரண்டிருந்த ஊடகவியலாளர்கள் மத்தியில் லஸந்த விக்கிரமதுங்க உரையாற்றினார். அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:-

பயங்கரவாத தடைச்சட்டம் பத்திரிகையாளர்கள் சுதந்திரமாக செயற்படுவதைத் தடுக்காது என அரசு தெரிவித்த போதும் இப்போது இந்தச் சட்டத்தின்கீழ் அரசு, பத்திரிகையாளர்கள் தமது கடமைகளை முறையாகச் செய்யவிடாமல் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் பத்திரிகையாளர்களைக் கட்டுப்படுத்தாது எனத் தெரிவித்த அரசு கடந்த வாரம் லேக் ஹவுஸ் நிறுவனத்தைச் சேர்ந்த இரு பத்திரிகையாளர்களை நாலாம் மாடிக்கு அழைத்து அடாவடித்தனமான விசாரணை நடத்தியுள்ளது. இதனால் சுதந்திரமாக செயற்படும் பத்திரிகையாளர்கள் அச்சம் கொண்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (த)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியுறவு அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றது என்றும் அறியப்பட்டது. (அ-1)

## அதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமரிடம் தெரிவித்திருந்தார்.

அதேவேளை -

தீர்வு யோசனை தொடர்பாக ஆராயும் சர்வகட்சி மாநாடு அடுத்தமாதம் 2ஆவது வாரத்தில் நடைபெறவிருக்கின்றது. இக்கூட்டத்தில் பிரதான கட்சியான ஐ.தே. கட்சி பங்குபற்றும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. (அ-1)

## கஜுவத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலை ஆகிய முகாம்களிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வாகரைப் பிரதேசம் மீது ஆட்லறித் தாக்குதல் நடத்தினர் என்றும் -

இதனையடுத்து விடுதலைப் புலிகள் பதிலுக்கு மேற்கொண்ட ஷெல் தாக்குதலிலேயே இரு படையினரும் காயமடைந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த இரு படையினரும் பொலநறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (த)

## போர் நிறுத்த கண்காணிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போதைய சூழ்நிலையில் தனது பணிகளை எவ்வாறு செய்வது என்பதனை மறுபரிசீலனை செய்யவும் மாற்றி அமைக்கவும் முடிவு செய்துள்ளதாக கண்காணிப்புக் குழு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி, கண்காணிப்பு குழு நியமிக்கப்பட்ட ஐந்து வருடங்களின் பின்னர் வழி முறைக ளில் மாற்றங்கொண்டுவருவது குறித்து முதற் தடவையாக இப்போதே பரிசீலனை செய்ய நேர்ந்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

### செப்ரெம்பரின் பின்னர்....

2006 செப்ரெம்பர் மாதத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த நாடுகளின் கண்காணிப்பாளர்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து காண்காணிப்புக்குழு தனது வெளிக்கள அலுவலகங்களை குறைக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. கண்காணிப்புக் குழுவினர் தமது வழமையான ரோந்து நடவடிக்கைகளையும் பாதுகாப்புக் காரணங்களால் நிறுத்த வேண்டியதாயிற்று - அத்தோடு இராணுவமும் விடுதலைப் புலிகளும் அண்மைக் காலத்தில் நடத்தும் மோதல்களின் காரணத்தால் கண்காணிப்புக் குழு தனது செயற்படு வழிமுறைகளை மறுபரிசீலனை செய்து மறுசீரமைக்க வேண்டிய தேவை தோன்றியுள்ளது.

அவ்வாறு செய்வதன் மூலம் மட்டுமே போர்நிறுத்த ஒப்பந்தத்தினால் கண்காணிப்புக் குழுவுக்குத் தரப்பட்ட ஆணையின் பிரகாரம் இரண்டு தரப்புகளுக்கும் நாம் ஆற்ற வேண்டிய பணிகளை, கடமைகளைச் செய்ய இயலும் - என்றும் கண்காணிப்புக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

### ஆணை நிறைவேற்றப்பட வேண்டும்

கண்காணிப்புக் குழுவுக்கென ஓர் ஆணை தரப்பட்டுள்ளது. எதிர்காலத்திலும் அந்த ஆணை நிறைவேற்றப்படுகிறது என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும், நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும் - குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### முழு அளவில் போர் மூண்டால்

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வாகரையையும் அதனை அண்டிய பிரதேசங்களையும் எப்படியேனும் கைப்பற்றி விடுவதாக இராணுவத் தரப்பு கூறி வருவதாலும் -

அவ்வாறு இராணுவம் தாக்குதல் நடத்தும் பட்சத்தில் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பதாலும் -

முழு அளவிலான போர் மூளும் நிலை தோன்றும் பட்சத்தில் கண்காணிப்புக் குழுவின் பணிகளை ஒழுங்கீனமாக்கி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## பாதுகாப்புச் சபை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரி டொனால்ட் பெரேரா, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, விமானப்படைத்தளபதி றொசான் குணதிலக்க மற்றும் பாதுகாப்பு அமைச்சகப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல ஆகியோர் இந்தக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

திருகோணமலை கடற்படைத் தளத்திற்கு விமானப்படையின் உலங்குவானூர்தி மூலம் புதன்கிழமை திடீரெனச் சென்ற மஹிந்தவை அண்மையில் அங்கு பயிற்சியை ஆரம்பித்துள்ள அவரது இரண்டாவது புதல்வர் ஜோசித ராஜபக்ஷ மரியாதை செலுத்தி வரவேற்றார்.

கடற்படையின் பாதுகாப்பு ஏற்பாடுகளை கேட்டறிந்த மஹிந்த, தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தை அங்கு கூட்டினார். அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய மஹிந்த நாடு பிளவுபட தான் அனுமதிக்கப்போவதில்லை எனக் கூறியதுடன் கடற்படையின் முக்கியத்துவம் குறித்து பேசியதுடன் அதனைக் கட்டியெழுப்ப சிங்கள பெற்றோர் முன்வர வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் அரச தலைவராக மஹிந்த பதவியேற்ற பின்னர் திருகோணமலைக்குச் சென்றிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களை மூன்று கூறுகளாகப் பிரிக்கும் திட்டத்தை மாகாண ஆளுநர் றியல் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரம அறிவித்த பின்னர் மஹிந்த திருகோணமலைக்குச் சென்றிருக்கிறார்.

மஹிந்தவின் வரவை முன்னிட்டு இராணுவத்தினரும், கடற்படையினரும் திருமலையில் தமிழ்மக்கள் செறிவாக வாழும் நகரப் பகுதிகளில் வீடு வீடாக சோதனைகளை நடத்தினர்.

வாகனங்களை நகர வீதிகளில் நிறுத்துவதற்கும் தடை விதித்திருந்தனர்.

பயணிகள் பஸ்கள் சோதனைச் சாவடிகளில் நிறுத்தப்பட்டு படையினராலும் பொலிஸாராலும் கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டன. (ஐ)

SUBRA
சித்தன்கேணி
2009 A/L
மாணவர்களுக்கான
கருத்தரங்கு - 30.12.2006
சனி பி.ப 3.30
Z புள்ளி என்றால் என்ன?
பாடத்தெரிவு முறை
புதிய பாடத்திட்டம்
விரிவுரையாளர்களும்
கல்வியியலாளர்களும் கலந்து
சிறப்பிக்க உள்ளனர்.
100மாணவர்கள் மட்டுமே
அனுமதிக்கப்படுவர்.
அனுமதி முற்றிலும் இலவசம்.

Subra (14)
சித்தன்கேணி
2009 A/L கலை, விஞ்ஞான, கணித, வர்த்தக பிரிவுகள்
ஆரம்பம் 01.01.2007 திங்கள் காலை 9.30
Tam -
Hi. C -
Log - E.S.
Dra -
His -
Chi -
Poli -
Hi -
Geo -
Eng -
G.I.T. -
I.Q. -
Eco. -
B.S.T. -
Acc. -
Phy -
Che. -
Bio. -
C.M. -
மீண்டும்
Spoken English
by
BRITTO
01.01.2007
மாலை 4.30 மணி
அனுமதிக்கு முந்துங்கள்
30.12.2006
நாக. தமிழ்ந்திரனின் வெற்றி வழி விசேட வகுப்பு சனி, ஞாயி. 2.30 - 4.00

2006 O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பம்
மேலதிக விபரங்களுக்கு நேரில்
Softview Computer College
No.55, Arasady Road, Jaffna. 021-2225170

ACA
கோவில் வாசல், கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
மாணவ சமூகத்தின் நன்மதிப்பினைப் பெற்ற எமது வழமையான யாழ். முன்னணி ஆசிரியர் குழுவோடு ஆரம்பமாகின்றது
A/L 2009
கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்.

N.C.A கல்வி நிறுவனம்
கே.கே.எஸ்.வீதி இணுவில்
A/L 2009
கலை, வர்த்தகம்
பொருளியல்: N.B.சுஜீதரன்
கணக்கீடு : N..சதீஸ்
வணிகக்கல்வி : S.சசி
தமிழ்: P.மகாலிங்கசிவம்
P. பாலமுரளி
இ. நாகரிகம்: M.மயூரன்
அளவியியல்: M.பிரகாஸ்
புவியியல்: K. அனோஜன்
நாடகம் : K.T.தர்மா
அரசியல்: S. செந்தூரன்
ஆரம்பம்:
30.12.2006
8 மணி சனி

C.C.A
A/L 2008
கணக்கீடு
தொங்கல் கணக்கு
By:M.சசிரூபன்
சனி, ஞாயிறு 6. 30 a.m.
வணிகக்கல்வி
சனி, ஞாயிறு 7. 30a.m.
By:K.முரளி
பொருளியல்
சந்தைப் பொருளாதாரம்
சனி, ஞாயிறு 10.30a.m.
By:R.ரூபன்

NEW SCIENCE CENTRE
யாழ். நகர்.
A/L DAY CLASS
CHE. -அன்பழகன்
PHY. -K. செல்வன்
BIO. -அல்போன்ஸ்
MATHS - சிவகரன்
பௌதிகவியல் வினாவிடை
ஆரம்பம் - 03.01.2007
Propriter - Poobalasingam

A/L CHEMISTRY
(2008 Batch)
அசேதன இரசாயனம்
By: E.RANJAN
ஆரம்பம்
30.12.2006
Sat 3 p.m.
ஐடியல் அக்கடமி
67/5, கஸ்தூரி வீதி
நீராவியடி, யாழ்

CHEMISTRY CENTRE
Temple Rd
(Green park முன்னே)
INORGANIC
Wed, Fri 4.30 - 5.30
By:
அன்பழகன் B.Sc.

NEW SCIENCE CENTRE
யாழ் நகர்
A/L 2008
INORGANIC
Sun 11 - 12.30
THERMO
Sat 12.30 - 2.00
By : அன்பழகன் B.Sc

CHEMISTRY GROUP CLASS
2009
GENERAL BASIC
ஆரம்பம் : 06.01.2007 சனி மாலை 4 மணி
DIAS B.Sc (Hons) Spl. Che
COLLEGE OF CHEMISTRY

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் ... வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.12.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org